Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 339

சனிக்கிழமை
01 நவம்பர் 2025

ஐப்பசி 15 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

யாழ்ப்பாணம் போதனாவில்

## குருதிக்குத் தட்டுப்பாடு!

யாழ்ப்பாணம், நவ. 1
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அனைத்துவகைக் குருதிக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் போதனாவின் குருதி வங்கிப் பிரிவினர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:- 11



யாழ். பல்கலைக்கழக

# நூலகக் கூரைக்குள் இருந்து ஆயுதங்கள் சில நேற்று மீட்பு

### 2005ஆம் ஆண்டுக்குரிய பத்திரிகையில் சுற்றப்பட்ட நிலையில் கைப்பற்றல்

### குருதிக் கறைபடிந்த துணிகளும் சிக்கின

யாழ்ப்பாணம், நவம்பர் 1
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தின் மேற்கூரைக்குள் பதுக்கப்பட்டிருந்த சில ஆயுதங்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன. இந்த விடயம் யாழ்ப்பாணத்திலும், நாடளாவிய ரீதியிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. 11

## டெங்குக்கு ஏதுநிலை 106,000 ரூபா தண்டம்!

14 ஆதன உரிமையாளர்களுக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றம் நடவடிக்கை



யாழ்ப்பாணம், நவ. 1
பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகரசபைப் பகுதிகளில், டெங்குத் தொற்றுக்கான ஏதுநிலை காரணமாக 14 ஆதனங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக 11

## பெற்றோலின் விலை 5 ரூபாவால் குறைப்பு



கொழும்பு, நவ. 1
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மாதாந்த எரிபொருள் விலைத் திருத்தத்தின்படி, 92 ஒக்ரேன் பெற்றோலின் விலை 5 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மாதாந்த விலைத் 11

## நாணய நிதியத்தின் ஆதிக்கம் பட்ஜெட்டில் நிச்சயம் இருக்கும்

பிரதான எதிரணி சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 1
ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கத்தின் பட்ஜெட்டில், சர்வதேச நாணய நிதியத்தின் ஆதிக்கம் இருக்கும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியுள்ளது.
இலங்கை அரசாங்கத்தின் அடுத்த வருடத்துக்கான 11

## பாதிரியார் வேடமிட்டு நிதி திரட்டியவர் கைது!

விளக்கமறியலில் வைத்தது மன்று

மன்னார், நவ. 1
மன்னாரில் பாதிரியார்களின் உடையில் நிதி சேகரிப்பில் ஈடுபட்ட போலி மதகுரு கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவரை விளக்கமறியலில் வைக்கு 11

தெற்காசியாவில்

## வாழ்க்கைச் செலவு கூடிய 2ஆவது நாடாக இலங்கை!

கொழும்பு, நவ. 1
தெற்காசியாவில் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள இரண்டாவது நாடாக இலங்கை பெயரிடப்பட்டுள்ளது.
இதன்படி, இலங்கையின் 11

## விஸா நடைமுறைகளை மாற்றியுள்ளது இந்தியா

இனி நேரில் கையாள முடிவு

கொழும்பு, நவ. 1
இலங்கையர்களுக்கான விஸா நடைமுறைகள் மற்றும் தூதகர உதவிகள் இனிவரும் நாள்களில் முகவர்களில் தங்கியிருக்காமல் நேரடிக் கண்காணிப் 11

### யாழ்ப்பாணத்தில் சுற்றிவளைப்பு: ஹெரோய்னுடன் ஐந்து பேர் கைது

அவர்களில் ஒருவர் பெண்

விரிவு பக்கம்:- 11

### 25 கிராம் ஹெரோய்னுடன் சந்தேகநபரொருவர் கைது!

விரிவு பக்கம்:- 11

முச்சந்தி முரளி

‘பெற்றோலில 5 ரூபாவைக் குறைச்சு டீசலில அதே 5 ரூபாவைக் கூட்டி கணக்கை பலன்ஸ் பண்ணியிருக்கினம் கண்டியளோ’

சட்டவிரோதமாக ஐரோப்பா பயணம்

## கிளிநொச்சியைச் சேர்ந்தவர் பெலாரஸில் சுட்டுக்கொலை!



கிளிநொச்சி, நவ. 1
சட்டவிரோதமாக ஐரோப்பாவுக்குச் செல்ல முற்பட்ட கிளிநொச்சியைச் சேர்ந்த நபரொருவர் பெலாரஸ் எல்லையில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
கிளிநொச்சி மாவட்டத்தில் சமுர்த்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றிய 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 31.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4241 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 28 42 45 58 |
| விசேட எழுத்து | Y |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 31.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1308 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 05 33 42 55 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 31.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0267 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 5 7 8 2 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 31.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2347 |
| ஆங்கில எழுத்து | D |
| சுப்பர் இலக்கம் | 07 |
| வெற்றி இலக்கங்கள் | 22 39 40 76 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 31.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5999 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 4 8 2 3 4 9 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 31.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2029 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 15 39 59 70 |
| விசேட எழுத்து | U |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 31.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0115 |
| வெற்றி இலக்கினம் | துலாம் |
| வெற்றி இலக்கங்கள் | 09 57 67 |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 31.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0574 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 2 3 4 9 |

# மகாவலி அதிகாரசபையால் 2026 இல் கிவுல்ஓயாத் திட்டம்

## உபாலி எம்.பி. தகவல்

வவுனியா, நவ.1

**இலங்கையின் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையால் அடுத்த ஆண்டில் கிவுல் ஓயா எனப்படும் மிகப் பெரிய நீர்ப்பாசனத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினரும் வவுனியா அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் தலைவருமான உபாலி சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் அண்மையில் இடம்பெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெலிஓயாப் பகுதிக்கு நீர்ப்பாசனத்தினை மேற்கொள்ளும் வகையில் பெரும்பகுதிகளை உள்ளடக்கி கிவுல் ஓயா என்னும் பெயரிலான பெரிய நீர்த்தேக்கம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் புதிய மற்றும் ஏற்கனவே உள்ள நிலங்களுக்கு விவசாய நீர் வழங்கப்படுமென மகாவலி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

குறித்த கிவுல் ஓயாத்திட்டத்தை நடைமுறைப்படுத்தினால் இங்குள்ள பெரும் பகுதிகள் நீர்த்தேக்கத்தின் நீரேந்து பிரதேசமாக மாறும்- என்றார். (ச-246,26)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 31.10.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0707 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கம் | 9 8 3 3 7 3 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 31.10.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2973 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கம் | 04 21 22 78 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 31.10.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கம் | 19 62 65 68 |
| வெற்றி வாரம் | 5134 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 31.10.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0803 |
| வெற்றி இலக்கம் | 19 32 46 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 31.10.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| மேஷம் | ♈ |
| வெற்றி இலக்கம் | 18 23 25 40 |
| சீட்டிழுப்பு வாரம் | 4685 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 31.10.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | J |
| சுப்பர் இலக்கம் | 24 |
| வெற்றி இலக்கம் | 15 34 49 65 |
| வெற்றி வாரம் | 2149 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 31.10.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கம் | 09 15 66 70 |
| வெற்றி வாரம் | 2799 |

# தமிழரின் பூர்வீக நிலங்களை கிவுல்ஓயாத் திட்டம் விழுங்கும்

## ரவிகரன் எம்.பி. கண்டனம்

வவுனியா, நவ.1



கிவுல்ஓயா நீர்ப்பாசனத்திட்டம் வெலிஓயாப் (பூர்வீக மணலாற்றுப் பிரதேசம்) பகுதியில் குடியேற்றப்பட்ட பெரும்பான்மை இனத்தவர்களை இலக்காகக் கொண்டே வடிவமைக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்தில் திட்டமிட்ட குடிப்பரம்பல் மாற்றத்தை இது ஊக்குவிக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்களின் பூர்வீக மணலாற்றை வெலிஓயாவாக மாற்றிவிட்டு அங்கு அத்துமீறி குடியேற்றப்பட்டுள்ள பெரும்பான்மை இனத்தவர்களுக்கு இந்த நீர்ப்பாசனத் திட்டத்தில் 6000ஏக்கர் நீர்ப்பாசன விவசாயக் காணிகள் வழங்கப்படவுள்ளதாக அறியமுடிகின்றது.

கிவுல்ஓயாத் திட்டத்தைச் செயற்படுத்தினால் வவுனியா வடக்கிலுள்ள தமிழர்களின் பூர்வீக விவசாயக்குளங்கள் மற்றும் அவற்றின் கீழான வயல்நிலங்கள், தமிழர்களின் பூர்வீகக் கிராமங்கள் பலவும் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்படும்.

தமிழர்களின் பூர்வீக விவசாயக் குளங்களான இராமன் குளம், கொட்டோடைக்குளம், ஒயாமடுக்குளம், வெள்ளான்குளம், பெரியகட்டுக்குளம், பனிக்கல்மடுக்குளம், சன்னமுற்றமடுக்குளம், கம்மாஞ்சிக்குளம், குறிஞ்சாக்குளம், புலிக்குட்டிக்குளம், திரிவைச்சகுளம் முதலான சிறிய நீர்ப்பாசனக்குளங்களும், வெடிவைச்சகல்லுக் குளத்தின்கீழ்வரும் வயற்காணிகள் பகுதியளவிலும், நாவலர்பாம், கல்லாற்றுக்குளம், ஈச்சன்குளம், கூழாங்குளம், வயற்காணிகளும் வவுனியா வடக்கிலுள்ள பழந்தமிழ் கிராமங்களான காட்டுப்பூவரசங்குளம் கிராமம், காஞ்சூரமோட்டைக் கிராமம், மருதோடைக்கிராமத்தின் ஒருபகுதி உள்ளிட்டபகுதிகள் குறித்த கிவுல்ஓயாத் நீர்ப்பாச னத் திட்டத்தின் நீரேந்து பகுதிகளாக மாறும் அபாயம் ஏற்படும்.

தமிழ் மக்களின் பூர்வீக விவசாய நிலங்கள் மற்றும் குளங்கள், பழந்தமிழ்க் கிராமங்கள் என்பவை விழுங்கப்பட்டே இந்தக் கிவுல் ஓயா நீர்ப்பாசனத் திட்டம் வெலிஓயாவில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களுக்காக முன்னெடுக்கப்படவுள்ளது- என்றார். (ச-246,26)

# துப்பாக்கிச்சூடு: இருவர் காயம்

கொழும்பு, நவ.1

கலவானை, தெல்கொடப் பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் இரண்டு பேர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக இரத்தினபுரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ச-இ)



## எதிர்க்கட்சிகளின் போராட்டம்

# மக்கள் போராட்ட முன்னணி ஆதரவளிக்காது!

கொழும்பு, நவ.1

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு எதிராக எதிர்வரும் 21 ஆம் திகதி நுகேகொடையில் முன்னெடுக்கப்படவுள்ள பேரணிக்குத் தமது கட்சி ஆதரவு வழங்காது என்று மக்கள் போராட்ட முன்னணி அறிவித்துள்ளது.

அரசாங்கத்தின் ஜனநாயகவிரோத நடைமுறைகளுக்கு எதிராக நவம்பர் 21 ஆம் திகதி நுகேகொடையில் கூட்டம் மற்றும் எதிர்ப்புப் பேரணியை நடத்துவதற்கு எதிரணிகள் ஒன்றுபட வேண்டும் என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. குறித்த பேரணிக்கு ஆதரவளிக்கப்படுமா என மக்கள் போராட்ட முன்னணியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் லஹிரு வீரசேகரவிடம் வினவப்பட்டபோதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

நாம் கொள்கை அடிப்படையில் அரசியல் நடத்தி வருகின்றோம். எனவே, ஏதேனும் பிரச்சினை வரும்போது அதிகாரத்துக்காக, நாடாளுமன்ற ஆசனத்துக்காக அந்தப் பக்கம், இந்தப் பக்கம் எனத் தாவும் அரசியல் எமக்கு ஏற்புடையது அல்ல. எனவே, எம்மால் எதிரணிகளுடன் இணைந்து செயற்படமுடியாது. ஏனெனில் எமது கொள்கையும், அவர்களின் கொள்கையும் வெவ்வேறானவை என்றும் லஹிரு வீரசேகர குறிப்பிட்டார். (ச-44)

# பேருந்து விபத்து; 4 பேர் உயிரிழப்பு

கொழும்பு, நவ.1

இரண்டு பேருந்துகள் மோதி விபத்துக்குள்ளானதில் 28 பேர் காயமடைந்துள்ளதுடன் நால்வர் உயிரிழந்துள்ளனர்.

கதுருவெலவிலிருந்து கொழும்பு நோக்கி நேற்றுப் பயணித்த தனியார் பேருந்து ஒன்று பயணிகளை ஏற்றிச்செல்வதற்காக நிறுத்தப்பட்டிருந்தபோது பின்னால் வந்த மற்றொரு தனியார் பேருந்து நிறுத்தப்பட்டிருந்த பேருந்தின் பின்புறத்தில் மோதியதில் விபத்துச் சம்பவித்துள்ளது.

விபத்தில் காயமடைந்த 28 பேர் சிகிச்சைக்காக குருநாகல் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்துத் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுண்நிதி நிறுவனங்களின் அத்துமீறலுக்குக் கட்டுப்பாடு

## வலி.கிழக்குப் பிரதேசசபையில் தீர்மானம்

**யாழ்ப்பாணம், நவ.1**

**நுண்நிதி நிறுவனங்களின் அத்துமீறிய செயற்பாடுகளையும் அடாத்தாக வட்டிக்கு நிதி வழங்குபவர்களையும் கட்டுப்படுத்துவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் ஒக்ரோபர் மாத அமர்வு தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதன்போது சபையின் உறுப்பினர் ஜங்கரன் இராமநாதன், "கிராமங்கள் தோறும் நுண்நிதிக்கடன் வழங்குநர்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்களை இலக்குவைத்து வீடு வீடாகச் சென்று நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறாக ஈடுபடுவதன் வாயிலாக பல்வேறுபட்ட பிரச்சினைகள் ஏற்படுகின்றன. நாட்டின் நடைமுறையிலுள்ள நிதிசார் சட்டம் ஒழுங்குகளின் வாயிலான கடப்பாடுகளைப் பூர்த்திசெய்யாது அவற்றை அந்த நிறுவனங்கள் மீறுகின்றன. இதனால் பெரும் இன்னல்களுக்குள் கிராமப்புறப் பெண்கள் தள்ளப்பட்டு விடுகின்றனர்.

எனவே நிதி நிறுவனங்களின் செயற்பாடுகளை கிராமங்களுக்குள் கண்காணிக்கவேண்டும்.

அவற்றின் அத்துமீறல்கள் தொடர்பாக உடன் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்" என்ற பிரேரணையை முன்வைத்தார்.

அதற்கமைய இந்த விடயம் தொடர்பில் விரைவான செயற்றிட்டங்களை வகுத்து செயற்படுத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என்று தவிசாளர் நிரோஷ் அறிவித்தார். (ச-இ)



# சுங்கம் ஈட்டியது ரூ.2 ரில்லியன்

கொழும்பு, நவ.1

இலங்கை சுங்கத்தால் இந்தாண்டு வசூலித்த வருமானம் இரண்டு ரில்லியன் ரூபாவை எட்டியுள்ளதாக இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வரலாற்றில் ஒரு அரசாங்கத் திணைக்களத்தினால் இதுவரை ஈட்டப்பட்ட அதிகபட்ச வருமானம் இதுவென இலங்கை சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜெனரல் சீவலி அருக்கோட தெரிவித்தார்.

மேலும் ஆண்டு இறுதிக்குள் வருமான இலக்கைவிட கூடுதலாக 300 பில்லியன் ரூபா வசூலிக்கமுடியும் எனவும் இலங்கை சுங்கத் திணைக்களம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (ச-இ)

# தெற்காசிய சம்பியன்ஷிப்பில் இலங்கைக்கு 40 பதக்கங்கள்

கொழும்பு, நவ.1

இந்தியாவில் நடைபெற்ற 4ஆவது தெற்காசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்பில் 16 தங்கம், 14 வெள்ளி, 10 வெண்கலப் பதக்கங்களைச் சுவீகரித்து இரண்டாம் இடத்தை இலங்கை வென்றுள்ளது.

அதன்படி இந்தப் போட்டியில் இலங்கையின் சார்பில் ஈட்டி எறிதல் வீரர் ருமேஷ் தரங்க பத்திரகே அதிசிறந்த மெய்வல்லுநருக்கான விருதை வென்றெடுத்தார்.

அத்துடன் பாத்திமா ஷபியா யாமிக் 100 மீற்றர், 200 மீற்றர், 4 X 100 மீற்றர் ஆகிய 3 போட்டிகளில் புதிய போட்டிச் சாதனைகளுடன் தங்கப்பதக்கங்களை சுவீகரித்தார்.

ஆண்களுக்கான 5000 மீற்றர் ஓட்டப்போட்டியில் மலையக வீரர் விக்னராஜ் வக்ஷன் வெள்ளிப் பதக்கத்தையும் குண்டு எறிதல் போட்டியில் யாழ். பருத்தித்துறை வீரர் சுசீந்திரகுமார் மிதுன்ராஜ் வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர். (ச-இ)



# வாடகைத் துப்பாக்கிதாரிகள் கொலைகளில் பயன்பாடு!

கொழும்பு, நவ.1

நாடு முழுவதும் பதிவான பெரும்பாலான துப்பாக்கிச்சூடுகள் கூலிக்கு அமர்த்தப்பட்ட துப்பாக்கிதாரிகளால் நடத்தப்பட்டதாகவும், அவர்களில் பலருக்குப் பாதிக்கப்பட்டவர்களுடன் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் பொலிஸ் விசாரணைகள் தெரிவிக்கின்றன.

புலனாய்வாளர்களின் கூற்றுப்படி, இந்த ஒப்பந்தக் கொலையாளிகள் பெரும்பாலும் போதைப்பொருளுக்கு அடிமையான நபர்களாக உள்ளனர்.

பல கொலைகள் 400,000 ரூபா முதல் 500,000 ரூபா வரை மட்டுமே செலவில் செய்யப்படுவதாகவும், சில சந்தர்ப்பங்களில், துப்பாக்கிச்சூடு நடத்தியவர்களுக்கு பணத்துக்குப் பதிலாக போதைப்பொருள் வழங்கப்பட்டதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-இ)

# பொலித்தீன் இலவசம் இன்றுமுதல் தடை

கொழும்பு, நவ.1

பொருள்களை எடுத்துச்செல்லப் பயன்படுத்தப்படும் பொலித்தீன் பைகளை இலவசமாக விநியோகிப்பது இன்று முதல் தடைசெய்யப்படும் என்று நுகர்வோர் விவகார ஆணையம் அறிவித்துள்ளது.

ஒக்ரோபர் முதலாம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பில், நுகர்வோருக்கு விற்பனையாளர்கள் பொலித்தீன் பைகளின் விலையைக் குறிப்பிடுவதை நுகர்வோர் விவகார ஆணையம் கட்டாயப்படுத்தியுள்ளது.

வணிகர்கள் இந்தப் பைகளின் விலையைத் தங்கள் வளாகத்தில் தெளிவாகக் காட்சிப்படுத்தவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)




## உதுலையும் ஒரு பிஸ்னஸ் இருக்கு!

நுவம்பர் மாதம் பிறந்திட்டுது. வழக்கமா இப்ப மழை கொட்டித் தீர்த்திருக்கோணும். ஆனால் இந்தமுறை பெரிசா இன்னும் பெய்யத் தொடங்கேலை. மின்னுக்கெல்லாம் பின்னுக்குத்தான் மழை போல. மழை பெய்தாலென்ன, பெய்யாட்டியென்ன இந்த நவம்பர் மாதம் எங்களுக்கு முக்கியமான மாதம். அது ஏன் எண்டு வாய்விட்டுத்தான் சொல்லோணும் எண்டில்லை. அப்பிடிப்பட்ட முக்கியமான மாதத்தை மரநடுகை மாதமாகவும் கொண்டாடுறனாங்கள். மரக்கண்காட்சிகள், மரநடுகைகள் எண்டு நவம்பரிலகளை கட்டும். அப்பிடி மரநடுகை செய்துததால, சில இடங்கள் சோலைவனமா மாறத்தொடங்கிட்டுது. வல்லையில இப்ப நாவல், வாகை, மகோகனி, மருதம் எண்டு மரங்கள் பெரிசா வரத்தொடங்கிட்டுது. முந்தி வல்லைவெளியால வாறதெண்டால் வெயிலுக்கு ஒதுங்க ஒரு நிழல் இருக்காது. இப்ப அப்பிடியில்லை. அந்த வெளியில இப்ப ரண்டு பக்கமும் மரங்கள் சடைச்சுப்போய் நிக்கிறதால எங்க வேணுமெண்டாலும் நிண்டு இளைப்பாறலாம். இதெல்லாம் மரநடுகையால வந்த மாற்றம் தான்.

ஆனாலும் எங்கட ஆக்கள் தன்னார்வத்தோட செய்யிற மரநடுகையிலகூட கண்ணுக்குத் தெரியாத ஒரு அரசியல் இருக்குது. எழுத்தாளரும், இயற்கை நேசருமான வடகோவை வரதராஜன் அடிக்கடி ஒரு விசயத்தைச் சொல்லுவார் "மரநடுகை எண்டிட்டு மலைவேம்பு, மகோகனி , காட்டுத்தேக்கு எண்டு பழமில்லாத மரங்களைத்தான் உந்த என்.ஜி.ஓ.க்களும், பெரிய அமைப்புகளும் நடுகினம். அதுகள் கெதியில வளரும். அதுக்கேத்தபடி எங்கட மண்ணின்ர வளத்தையும் தண்ணியையும் நல்லா உறிஞ்சிப்போடும். அதோட அந்த மரங்கள் இனவிருத்தியும் செய்யாது. அடுத்தமுறை நடோணும் எண்டால் ஆர் அதை விக்கினமோஅவையிட்டத்தான் வாங்கோணும். கிட்டத்தட்ட இதுவும் ஒரு பிஸ்னஸ்தான். ஆனால் எங்கட மண்ணுக்கே உரித்தான வேம்பு, இலுப்பை, நாவல் மாதிரி பழம் தரக்கூடிய மரங்களை நட்டால் இப்பிடிப் பிரச்சினையள் இல்லை. அதுகள் வளர்ந்து, பழங்களுக்க இருக்கிற வித்து பரவி தன்ரபாட்டில பெருகும்" இதுதான் அவர் சொல்லுற விசயம்.

வடிவா யோசிச்சால் மரநடுகை எண்ட நல்லகாரியத்துக்குள்ள ஒரு பிஸ்னஸ் எங்களுக்குத் தெரியாமலே புகுந்திட்டு எண்டது விளங்கும். இப்ப றோட்டுவழியளில நடுகிற பெரும்பாலான மரங்கள் மகோகனியும், மலைவேம்பும் தான். உதுகள் புறொய்லர் கோழிமாதிரி கெதியா, பெருப்பமா வளரும். அதால மரத்தேவையளுக்கும் பாவிக்கலாம். வெளிநாடுகளில வீடுகளுக்குக் கூடுதலா மரங்கள்தான் பாவிப்பினம். அதுக்காகத்தான் உந்த மரங்களை வைச்சால், கெதியில பலன் எடுக்கலாம் எண்டு அங்க நடுகிறவை. அதை நாங்களும் கொப்பியடிச்சு அதால வாற நட்டங்களை யோசிக்காமல் இஞ்சையும் நடுகிறம். இனியாவது மரநடுகை எண்ட நல்லகாரியத்தை இன்னும் சிறப்பாச் செய்ய எங்கட ஊருக்கு ஏத்த, இஞ்சையுள்ள, பழம் தரக்கூடிய மரங்களை நட்டால் நாட்டுக்கும் நல்லது, பறவையள், அணில் மாதிரியான ஜீவராசியளுக்கும் நல்லது, மண்ணுக்கும் நல்லது.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் விமர்சனங்களும் நீங்கும். சகோதரர்கள்மூலம் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. பிள்ளைகள் ஆலோசனை கேட்டு வருவார்கள்.

**இடபம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. ஆனால், குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்களால் குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

**கடகம்:** இன்று எதிலும் பொறுமையுடனும் சிந்தித்தும் செயற்படவேண்டிய நாள். முக்கியமான முடிவுகள் எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். உறவினர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வாழ்க்கைத்துணையுடன் இணக்கமாக நடந்துகொள்வது அவசியம்.

**சிம்மம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள்மூலம் ஆதாயம் கிடைக்கும். முக்கியமான பிரமுகர்மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**கன்னி:** தேவையான பணம் இருப்பதால் செலவுகளைச் சமாளித்துவிடுவீர்கள். உறவினர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். கணவன்–மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனக்கசப்புகள் நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். தாய்மாமன் வழியில் சுபச்செலவு ஏற்படும்.

**துலாம்:** பிள்ளைகள்மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர்கள். வாழ்க்கைத் துணையின் முயற்சிக்கு ஒத்துழைப்புக் கொடுப்பீர்கள். குடும்ப உறுப்பினர்களிடையே உங்கள் மீதான மரியாதை அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சிதரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தாய்மாமன் வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமாக நடந்துகொள்ளவும். பிற்பகலுக்குமேல் தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மகரம்:** மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். பிள்ளைகள் கேட்பதை மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொடுப்பீர்கள். உங்கள் முயற்சிக்கு பெற்றோரின் ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்:** சிலருக்குத் திடீர்ச் செலவுகளால் கையிருப்புக் குறையும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்கவேண்டாம். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**மீனம்:** குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உண்டு. சிலருக்கு எதிர்பாராத பணவரவும் திடீர்ச் செலவுகளும் ஏற்படும். சகோதரர்கள் உதவிகேட்டு வருவார்கள்.



## கோப்பாய் கலாசாலையில் வாராந்த ஒன்றுகூடல்


யாழ்ப்பாணம், நவ.1

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் வாராந்த ஒன்றுகூடல் நிகழ்வு கலாசாலையின் முதல்வர் ச. லலீசன் தலைமையில் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கடந்த புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

கலாசாலையின் தமிழ்த்துறை விரிவுரையாளர் வேல் நந்தகுமார் அதிதிக்கான அறிமுக உரையை நிகழ்த்தினார். கல்வி அமைச்சில் செயற்படுத்தப்படும் "ரூம் டு ரீட்" செயற்றிட்டத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் காரைக்கவி. கந்தையா பத்மானந்தன் நிகழ்வில் அதிதிப் பேச்சாளராகக் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்.

இணையத்தின் முக்கியத்துவம் பற்றிய ஆவணக் காணொலியைக் கலாசாலையின் விசேட கல்வி ஆசிரிய மாணவி நுஸ்லா சாஜஹான் காட்சிப்படுத்தினார்.

'இணையம்' எனும் தலைப்பில் கலாசாலையின் இரண்டாம் வருட உடற்கல்விநெறி ஆசிரிய மாணவி உசாந்தினி விமல்ராஜ் உரை ஆற்றினார். (ச-25, 66)



நீர்வேலி கந்த சுவாமி கோவிலில் கந்தசஷ்டி உற்சவத்தின் இறுதிநாளான கடந்த செவ்வாய்க்கிழமை சண்டேஸ்வரர் உற்சவம் சிறப்பாக இடம் பெற்றது. (ச-25, 17)

## நிறுத்தல் அளவை முத்திரை பதித்தல்

யாழ்ப்பாணம், நவ.1

வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற எல்லைக்குள் உள்ள வர்த்தக நிலையங்கள், பொதுச்சந்தைகள் என்பவற்றில் பயன்படுத்தப்படும் நிறுக்கும் மற்றும் அளக்கும் உபகரணங்களுக்கு முத்திரை பதிக்கும் நடவடிக்கை வல்வெட்டித்துறை நகராட்சிமன்ற பொது நூலக முன்றலில் நாளைமறுதினம் திங்கட்கிழமை மற்றும் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. இதில் அனைத்து வர்த்தக நிலைய உரிமையாளர்களும் தமது நிறுக்கும், அளக்கும் உபகரணங்களுக்கு முத்திரை பதித்துக்கொள்ளமுடியும் என நகராட்சிமன்றத் தவிசாளர் திருமதி தவமலர் சுரேந்திரநாதன் அறிவித்துள்ளார். (ச-25)

## ஆங்கிலக் கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், நவ.1

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் குறுகியகால ஆங்கிலக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 16 வயதுக்கு மேற்பட்டவராகவும், க.பொ.த. சாதாரண தரத்தில் முதலாம்மொழி கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவிலில் அமைந்துள்ள நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்கமுடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச-41)



பூநகரி பிரதேசசபையின் இரணைதீவு பொதுநூலகத்தின் ஏற்பாட்டில் வாசிப்பு மாதத்தின் இறுதி நாள் நிகழ்வுகள் இரணைதீவு உப அலுவலகத்தின் பொறுப்பதிகாரி சிவபாதசுந்தரம் சபேசன் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றன. (ச-25,113)

## நீர்வேலி முதியோர் சங்கத்தின் முதியோர் கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.1

நீர்வேலி தெற்கு முதியோர் சங்கத்தின் ஏற்பாட்டில், முதியோர் கௌரவிப்பு நிகழ்வு நீர்வேலி தெற்கு மாதர் சங்க மண்டபத்தில் இன்று சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறும்.

முதியோர் சங்கத்தின் தலைவர் சி.மணியம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் ஓய்வுநிலைப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் இ.குணநாதன் பிரதம விருந்தினராகவும், கோப்பாய் பிரதேச செயலக முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி கோ.செல்வப்பிரியா, கிராம அலுவலர் சி.தயாபரன், ஓய்வுநிலைத் தாதிய உத்தியோகத்தர் திருமதி சி.பாலசௌந்தரி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், இரா.இராசம்மா கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள். சிவஸ்ரீ சா.சோமதேவக் குருக்கள், சிவஸ்ரீ இரா.சுவாமிநாதக்குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்குவர். (ச-25, 17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# இளமையைத் தொலைக்கும் இலங்கை

ஆசியாவில் முதியோரின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துவரும் நாடுகளில் ஒன்றாக இலங்கையும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. 2012ஆம் ஆண்டில், நாட்டின் ஒட்டுமொத்த சனத்தொகையில் 12 வீதமாக இருந்த முதியோர்களின் எண்ணிக்கை, 2024ஆம் ஆண்டில் 18 வீதமாக உயர்ந்துள்ளது என்றும், 2040ஆம் ஆண்டுக்குள் நாட்டில் 25 வீதமானவர்கள் முதியோராக இருப்பார்கள் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முதியோர்களின் அனுபவமும், அறிவும் தனிமனிதர்களுக்கும், சமூகத்துக்கும், நாட்டுக்கும் வரமாய் அமைந்த விடயங்கள் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால், எந்தவொரு நாட்டில் மூத்தோர்களின் எண்ணிக்கை வழக்கமான சராசரிகளுக்கு அப்பாற்பட்டுச் செல்கின்றதோ, அந்த நாடு 'இறப்பை நோக்கி' நடைபோடுகின்றது என்றே அடையாளப்படுத்தப்படும். இதுவே உலக வழமையுமாகும். பிறந்த அனைவரும் மூப்படைவதே நியதி. அவ்வாறாயின், முதியோர் எண்ணிக்கை எவ்வாறு நாட்டில் அதிகரிக்கும்? இங்கே 'மூத்தோர் எண்ணிக்கை அதிகரிப்பு' என்பதன் மறைமுகப் பொருள், 'குழந்தைகள் பிறப்பு வீதத்தில் ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சி' என்பதே. நாட்டில் முதியோரின் எண்ணிக்கை அதிகரிப்பதானது, 'உழைக்கும் சமூகத்தை' இல்லாமல் செய்துவிடும் ஆபத்துக்குரிய விடயம். அத்துடன், இராணுவப்பலம் தொடக்கம், மருத்துவச் செலவுவரை இதுவொரு உலகளாவிய பிரச்சினையாகவும் அமைகின்றது. அதனால்தான்,மூத்தோரின் சராசரி அதிகரிக்கும்போது மேற்கத்தேய நாடுகள் குடியுரிமை நிபந்தனைகளைத் தளர்த்தி வேற்றுநாட்டு இளைஞர்களை தம் நாட்டுக்கு உரித்தானவர்களாக மாற்றுகின்றன. தென்கொரியா, ஜப்பான் போன்ற நாடுகள், குழந்தைகளைப் பெற்றால் சன்மானங்களையும் விசேட விடுமுறைகளையும் அறிவிக்கின்றன. எனவே, இலங்கையில் மூத்தோரின் எண்ணிக்கை அதிகரித்துவருவதன் பின்னணியில் உள்ள ஆபத்துகளை அரசாங்கம் நன்கு உய்த்துணரவேண்டும்.


திருமண வாழ்க்கையில் இளையோருக்கு இருக்கக்கூடிய நாட்டமற்றநிலையே நாட்டில் குழந்தைப்பேறின்மைக்குப் பிரதான காரணமாக அமைந்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவின் காலத்தில், நாடு திவாலடைந்ததால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக இளைஞர்கள் அச்சமடைந்தனர். வறண்ட பொருளாதாரத்தில் குடும்ப வாழ்க்கையை எவ்வாறு கொண்டு செல்வது? என்ற கேள்விகள் அவர்களுக்கு எழத்தொடங்கின. இதனால், பலர் திருமண வாழ்க்கையைத் தள்ளிப்போட்டனர். இன்னும் சிலர் குழந்தைப்பேற்றைக் காலம் தாழ்த்தினர். இதன் விளைவே இன்று நூற்றுக்குப் பதினெட்டுப் பேர் முதியவர்களாக இருப்பதற்குக் காரணம். தற்போது முன்னறிவிக்கப்பட்டுள்ளதைப் போன்று, 2040ஆம் ஆண்டுக்குள் 25 வீதமானவர்கள், அதாவது நான்கில் ஒருவர் முதியவராக அல்லாமல் இருக்கவேண்டுமென்றால், இளைஞர்கள் தமது எதிர்காலம் தொடர்பிலும் நாட்டின் சுபீட்சம் தொடர்பிலும் நம்பிக்கை வைக்கவேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் அதி விரைவாக மேற்கொள்ளவேண்டும். இந்த நாடு ஏராளமான விடயங்களை இழந்துவிட்டது. உழைக்கும் வர்க்கத்திலும் இடைவெளி விழுந்துவிட்டால், அதன் பாதிப்பு நீண்டகாலத்துக்கு நின்று கொல்லும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : adv[illegible]

## நாளொரு நல்வார்த்தை

"மரங்களை நாட்டுவதற்கான மிகச்சிறந்த காலம் இருபது வருடங்களுக்கு முன்னர் இருந்தது. அடுத்த நல்ல நாள் இன்றாகும்."

—சீனப்பழமொழி—




# நீரிழிவு நோயால் ஏற்படும் காயங்களுடன் 100,000 பேர்

## இலங்கை மருத்துவச் சங்கம் தகவல்

கொழும்பு, நவ.1

**காயம் ஏற்பட்ட நீரிழிவு நோயாளிகள் சுமார் ஒரு இலட்சம் பேர் தற்போது நாட்டில் இருக்கின்றனர். நீரிழிவு நோயாளிகளின் காயங்கள் புற்றுநோயைவிடவும் கொடூரமானவை என்று இலங்கை மருத்துவச் சங்கம் தெரிவித்துள்ளது.**

கொழும்பு தேசிய மருத்துவமனையின் இரத்தநாளங்கள் தொடர்பான விசேட சத்திரசிகிச்சை நிபுணர் பேராசிரியர் ரெஸ்னி காசிம் இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கையில், நீரிழிவு நோயாளிகளின் பாதங்களில் ஏற்படும் ஒரு சிறிய காயத்தின் காரணமாகக்கூட, பாதத்தை வெட்டி அகற்றவேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படுவது அரிதல்ல. அதேபோல், நீரிழிவு நோய் காரணமாக ஒரு கால் இழந்தால், அவர்களில் 30 வீதமானோருக்கு மூன்று வருடங்களுக்குள் மற்றைய காலும் இழக்கப்படுவதற்கான வாய்ப்பு அதிகம். நீரிழிவு நோயின் காரணமாக இரத்த ஓட்டம் சரியாகச் செல்லாது. நரம்புகள் சரியாகச் செயற்படாது. அதுமட்டுமல்லாமல் கல்சியம் உருவாகிறது. இலங்கையில் குறைந்தபட்சம் இரண்டு மில்லியன் நீரிழிவு நோயாளிகள் உள்ளனர்- என்றார். (ச-இ)

# மின்சாரம் தாக்கி பெண் உயிரிழப்பு

கொழும்பு, நவ.1

கண்டி, பொக்காவல பொலிஸ் பிரிவின் ரம்புகேவெலப் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு மின்சாரம் தாக்கியதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். மின்சார ஹீட்டரைப் பயன்டுத்தியபோது அவர் உயிரிழந்துள்ளார் என்று தெரியவந்துள்ளது. (ச-இ)



# பத்மேவின் சகாக்கள் கைது

கொழும்பு, நவ.1

பொலிஸ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த கெஹெல்பத்தர பத்மே என்பவரின் சகாக்கள் மூவர் வத்தளைப் பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வத்தளை பல்லியவத்தப் பிரதேசத்தில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது மூன்று சந்தேகநபர்களும் ஐஸ் போதைப் பொருளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ச-இ)



# நீதவான் இடைநீக்கம்

வெல்லவாய நீதிமன்ற நீதவான் மஞ்சுள ரத்நாயக்க இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். பல வழக்குகளில் அவரது தீர்ப்புகள் சர்ச்சைக்குரியதாக அமைந் தமை குறித்து பொலிஸ்மா அதிபரால் தலைமை நீதிபதிக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனையடுத்து நீதித்துறைச் சேவை ஆணைக்குழு மேற்கொண்ட விசாரணைக்கமைய அவர் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். (ச-இ)

# வெலிகம துப்பாக்கிச்சூடு: சந்தேகநபர்களுக்கு மறியல்

கொழும்பு, நவ.1

வெலிகம பிரதேசசபைத் தவிசாளர் லசந்த விக்ரமசேகர சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட ஏழு சந்தேகநபர்களும் நவம்பர் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சம்பந்தப்பட்ட சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் மாத்தறை பிரதான நீதவான் சதுர திசாநாயக்க முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்தக் கொலைச்சம்பவம் தொடர்பாக துப்பாக்கிச்சூடு நடத்தியவர் மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் உட்பட ஒன்பது சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச-இ)

**நாளை** ஞாயிற்றுக்கிழமை - ஐப்பசி 16
02.11.2025
சுபநேரம் : 09.04 - 10.34
ராகுகாலம் : 04.34 - 06.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் தனியார் பேருந்துகளில் இன்று முதல் 'ரிக்கெற்' கட்டாயம்

## தவறின் 500/= அபராதம்

### வடக்கு போக்குவரத்து அதிகாரசபை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.1

**வடக்கு மாகாணத்தில் தனியார் பொதுப்போக்குவரத்துப் பேருந்துகளில் பயணிகள் பரிசோதனை நடவடிக்கையின்போது பற்றுச்சீட்டினைக் காண்பிக்கத் தவறுமிடத்து அபராதம் விதிக்கப்படும் என்று வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் அதன் பொதுமுகாமையாளர் ப.ஜெயராஜா தெரிவிக்கையில், போக்குவரத்து அமைச்சு பொதுப்போக்குவரத்துப் பேருந்துகளில் பயணிகளுக்கு பற்றுச்சீட்டு வழங்கவேண்டும் என்பதனைத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருவதோடு எல்லா மாகாணங்களிலும் அதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பில் தொடர்ச்சியாக அவதானித்துவருகின்றது.

அண்மையில் பற்றுச்சீட்டுப் பெறாமல் தனியார் பொதுப்போக்குவரத்து பேருந்துகளில் பயணிகளுக்கு அபராதம் விதிக்கும் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு போக்குவரத்து அமைச்சால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இன்று முதல் தனியார் பொதுப்போக்குவரத்துப் பேருந்துகளில் பயணிகள் பற்றுச்சீட்டுப் பெறுவது கட்டாயம். வட மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை நியதிச்சட்டத்தின் பிரிவு 47(ஆ) இன் பிரகாரம் பற்றுச்சீட்டு இல்லாமல் அல்லது பரிசோதனையின்போது பற்றுச்சீட்டினைக் காண்பிக்கத் தவறும் பயணி ஒருவருக்கு ஐந்நூறு ரூபா தண்டம் விதிக்கப்படும்.

அதனோடு சேர்த்து மேலதிகமாக அவர் பயணம் செய்த தூரத்துக்கான பயணச்சீட்டின் பெறுமதியின் இரட்டித்த தொகையினை அதிகாரசபையினால் அதிகாரமளிக்கப்பட்டவருக்குச் செலுத்துதல் வேண்டும். எனவே தனியார் பொதுப்போக்குவரத்துச் சேவைகளில் பயணிப்போர் இதனைக் கருத்திற்கொண்டு செயற்படுவதன்மூலம் சிரமங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம் - என்றார். (ச-இ)



## போதைப்பொருள் ஒழிப்புச் செயற்றிட்டம் டிறிபேர்க் கல்லூரியில் விழிப்புணர்வு!

நாடளாவிய ரீதியாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் ஆரம்பித்துவைக்கப்பட்ட போதைப்பொருள் ஒழிப்புச் செயற்றிட்டத்தின் விழிப்புணர்வு நிகழ்வு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மாணவர்களால் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது. டிறிபேர்க் கல்லூரி அதிபர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச செயலர் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் பாடசாலைச் சமூகத்தினர் ஆகியோர் கலந்துகொண்டனர். பாடசாலை முன்றலில் மாணவர்கள் போதைக்கு எதிரான வாசகங்களைத் தாங்கியிருந்ததுடன் மாணவர்கள் சாவகச்சேரி நகர்பகுதியில் எதிர்ப்புப் பேரணியாகப் பாடசாலையைச் சென்றடைந்தனர்.

இதன்போது தென்மராட்சிப் பிரதேசசெயலரால் போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் அபாயம் தொடர்பில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு விளக்கம் வழங்கப்பட்டது. (ச-28-131)



## போதைப்பொருளைக் கட்டுப்படுத்த கிராம ரீதியாக பாதுகாப்புக்குழுக்கள்

### சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.1

போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் பாவனையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், அதற்கான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு, ஒவ்வொரு கிராமங்களிலும், பாதுகாப்புக் குழுக்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாகக் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ள எம். கோணேஸ்வரன் தெரிவித்தார்.

போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தும் நோக்கில், தேசிய ரீதியில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்துக்கமைய, சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்படவேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பில் கிராம அலுவலர்களுடன் நடத்திய சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். சாவகச்சேரிப் பிரதேசத்தில் இடம்பெறுகின்ற போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் பாவனை தொடர்பில் விசேட கண்காணிப்பு இடம்பெறுகின்றது. இதுதொடர்பில் மக்களுடன் சந்திப்பை நடத்தி, மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (க-28)

## மழை கிடைக்காவிடின் பெரும்போகம் பாதிக்கும்

யாழ்ப்பாணம், நவ.1

இம்முறை மழை கிடைக்காவிடின் பெரும்போக நெற்செய்கையில் பாதிப்பு ஏற்படும் என்று விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மழை கிடைக்கவேண்டிய இந்த மாதத்தில் காலநிலை வேறுபாடு காரணமாக வெப்பமான சூழல் நிலவிவருகிறது.

இதனால் பெரும்போக நெற்செய்கை பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. வடக்கு மாகாணத்தில் பெரும்போகச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் வயல் நிலங்களில் தண்ணீர் வற்றிச்செல்வதைக் காணமுடிகிறது.

அத்துடன் சில இடங்களில் இரவுவேளையில் அதிகளவில் பனிமூட்டம் காணப்படுகின்றது என்றும் விவசாயிகள் தெரிவித்தனர். (ச-25.17)

சாவகச்சேரியில்

## நடமாடும் சேவையும் மருத்துவ முகாமும்!

யாழ்ப்பாணம், நவ.1

யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் மற்றும் சாவகச்சேரிப் பிரதேச செயலகம் இணைந்து நடத்தும் நடமாடும் சேவை எதிர்வரும் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை சாவகச்சேரிப் பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நடமாடும் சேவைமூலம் ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவை (தேசிய அடையாள அட்டை) ஓய்வூதியம் தொடர்பான சேவைகள், பிறப்பு, இறப்பு மற்றும் உத்தேச வயதுச் சான்றிதழ்கள் தொடர்பான சேவைகள், மோட்டார் வாகனப்பதிவு மற்றும் வாகன வருமான அனுமதிப்பத்திரம் தொடர்பான சேவைகள், நகரசபை, பிரதேசசபைகளால் வழங்கப்படும் சேவைகள், பொலிஸ் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகள், மனிதவள அபிவிருத்தி தொடர்பான சேவைகள் மற்றும் தொழில் வழிகாட்டல்கள், திறன் அபிவிருத்தி தொடர்பான சேவைகள் மற்றும் தொழிற்கல்வி வழிகாட்டல்கள், சமூக சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகள், முதியோர் சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகள், காணி தொடர்பான சேவைகள் ஆகிய சேவைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் அத்துடன் மருத்துவ முகாமும் இடம்பெறவுள்ளது.

இதில் பொதுமருத்துவப் பரிசோதனை, கண்புரைப் பரிசோதனை, இலவச மூக்குக்கண்ணாடி வழங்குதல் போன்ற சேவைகளும் இடம்பெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-159-9)

## மணவாளக்கோலம்

யாழ்ப்பாணம், நவ.1

இருபாலை கிழக்கு கோப்பாய் மானம்புலம் அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான மணவாளக்கோல விஞ்ஞாபனம் நாளைமறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 8மணி முதல் விநாயகர் வழிபாடு, வாஸ்துசாந்தி, யாக பூஜை, சங்குப்பூஜை மூலமூர்த்திக்குத் திரவிய அபிஷேகம், திரவிய ஹோமம், பூர்ணாகுதி, தீபாரதனை, கும்ப வீதி பிரதட்சனம், 1008 சங்குகளினால் அபிஷேகம், மூலவர் அலங்காரபூஜையைத்தொடர்ந்து வசந்தமண்டபப் பூஜை, உள்வீதி வெளிவீதியுலா வருதல், மகேஸ்வர பூஜை என்பன இடம்பெறும் என ஆலய தர்மகர்த்தா மா.மகேஸ்வரன் அறிவித்துள்ளார். (ச-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்மையாக்கும் கிறீம்களால் புற்றுநோய் ஏற்படும் அபாயம்!

## ஆய்வில் கண்டறிவு; நிபுணர்கள் எச்சரிக்கை

கொழும்பு , நவ.1

**சருமத்தை வெண்மையாக்கும் கிறீம்களைப் பயன்படுத்துவதற்குப் பின்னால் கடுமையான புற்றுநோய் ஆபத்து உள்ளது என்று ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. இவ்வாறு புற்றுநோயியல் நிபுணர் சிதத் விஜேசேகர எச்சரித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சருமத்தை வெண்மையாக்கப் பயன்படுத்தப்படும் இந்தக் கிறீம்களில் உள்ள சில இரசாயனங்கள் புற்றுநோய்க் காரணிகளாகச் செயற்படுகின்றன. நகத்தின் நடுவில் நிறமாற்றத்தை ஏற்படுத்தும் செயற்பாடு பொதுவாக சிறுநீரகம் தொடர்பான நோய்களை ஏற்படுத்துகின்றது என்றாலும், வெண்மையாக்கும் கிறீம்கள் இதனுடன் தொடர்புடையவை என்பதை சமீபத்திய கண்டுபிடிப்புகள் வெளிப்படுத்தியுள்ளன.

இந்த வெண்மையாக்கும் கிறீம்களில் ஹைட்ரோகுவினோன் பிரதான ஆபத்தான இரசாயனமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த இரசாயனம் செல்களுக்குள் செயற்படும் விதம் காரணமாகப் புற்றுநோயை ஏற்படுத்தக்கூடும்.

இந்தக் கிறீம்களில் அதிக அளவுகளுடன் இந்த இரசாயனத்தைப் பயன்படுத்துவதால் புற்றுநோய் ஏற்பட்டால் அது பொதுவாக 10 முதல் 15 ஆண்டுகள் வரை ஆகலாம் என்று நிபுணர் மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

கிறீம்களை மருத்துவ ஆலோசனையின் பேரில் பயன்படுத்தும்போது கூட, இது ஒரு குறுகிய காலத்துக்கு மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இவ்வாறு ஆபத்தில் சிக்காமல் நுகர்வோர் கவனமாக இருக்கவேண்டும்.

நீங்கள் வெண்மையாக்கும் கிறீம்களைப் பயன்படுத்துகிறீர்கள் என்றால், அதை உறுதிப்படுத்த மருத்துவரை அணுகுவது அவசியம் - என்றார். (ச-இ)



## வடக்கு மாகாணக் கல்வி அபிவிருத்தி துறைசார் அதிகாரிகள் ஆராய்வு!

யாழ்ப்பாணம், நவ.1

வடக்கு மாகாணக் கல்வி அபிவிருத்தி தொடர்பாக துறைசார் நிபுணத்துவ அதிகாரிகளுடனான கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இதில் வடக்கு மாகாணப் பாடசாலைகளில் மாணவர்கள் வரவு, பாடரீதியாக மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை மற்றும் முன்பள்ளிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. குறிப்பாக முன்பள்ளிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் பிரதேச ரீதியாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டது. அத்துடன் பிரதேசசபையினருடன் கலந்துரையாடி மாதிரி முன்பள்ளி ஒன்றை நிபுணத்துவத்துடன் பயிற்சி வழங்குவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. (ச-27)

## இலங்கை அரசுக்கு அழுத்தத்தை பிரயோகிக்கவேண்டும் பிரிட்டன்

### *சிவில் சமூகப் பிரதிநிதிகள் கோரிக்கை*

கொழும்பு. நவ.1




தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு, நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புதல், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தல் போன்ற விடயங்களில் இலங்கை அரசாங்கத்துக்கு பிரிட்டன் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று சிவில் சமூகப் பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் அன்ட்ரூ பற்றிக் மற்றும் சிவில் சமூகப்பிரதிநிதிகளுக்கு இடையே அண்மையில் கொழும்பில் சந்திப்பொன்று நடைபெற்றது. அதிலேயே அவர்கள் இவ்வாறு வலியுறுத்தியுள்ளனர்.

இந்த விடயங்கள் சிக்கலானதும், சர்ச்சைக்குரியனவாகவும் காணப்படுவதால் அவை சார்ந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதை அரசாங்கம் தாமதித்து வருகின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிபீடமேறி ஒரு வருடகாலம் முடிவற்றநிலையில், பயங்கரவாதத்தடைச்சட்ட நீக்கம், நிகழ்நிலைக்காப்புச் சட்டத்திருத்தம், அரசியற்கைதிகள் விடுதலை, புதிய அரசமைப்பு உருவாக்கம் என்பன உள்ளடங்கலாக தேர்தலின் போது வழங்கப்பட்ட வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. இந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குப் பிரிட்டன் உடனடியாக அழுத்தங்களைப் பிரயோகிக்கவேண்டும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது இலங்கையின் சமகால மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் கேட்டறிந்த பிரிட்டன் தூதுவர், அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட புதிய தீர்மானம் போன்ற விடயங்கள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடினார். (எ-இ)



வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் வருடாந்தக் கந்தசஷ்டி விரதத்தின் திருக்கல்யாண உற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு பக்தி பூர்வமாகவும், சிறப்பாகவும் நடைபெற்றது. (ச-66)

## அரச புலனாய்வுப் பிரிவுக்கு புதிய தலைவர் நியமனம்!

கொழும்பு,நவ.1

இலங்கையின் புதிய தேசிய புலனாய்வுத் தலைவராக மேஜர் ஜெனரல் நளிந்த நியங்கொட நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசிய புலனாய்வுப் பிரிவுத் தலைவராக இருந்த மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய 60 வயதை எட்டிய நிலையில் அவர் பதவியில் இருந்து ஓய்வுபெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## போராட்டத்தில் இணையாவிடில் ஐக்கிய மக்கள் சக்திக்கே பாதகம்

### பெரமுன எச்சரிக்கை

கொழும்பு,நவ.1

எதிர்க்கட்சிகள் இணைந்து முன்னெடுக்கவுள்ள போராட்டத்தில், ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்காவிட்டால் அது அந்தக் கட்சிக்கே அரசியல் ரீதியில் பாதகத்தை ஏற்படுத்தும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி தெரிவித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஊழல், தவறான நிர்வாகம் மற்றும் ஜனநாயக விரோத நடைமுறைகளுக்கு எதிராக எதிர்வரும் நவம்பர் மாதம் 21 ஆம் திகதி நுகேகொடையில் கூட்டம் மற்றும் எதிர்ப்புப் பேரணியை நடத்துவதற்கு முக்கியமான சில எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி , ஐக்கிய தேசியக் கட்சி, பிவிதுரு ஹெல உறுமய , மக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா மகாஜனக் கட்சி என்பன இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

எனினும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி குறித்த பேரணியில் பங்கேற்காதிருக்கத் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-44)

## விரத காலங்கள் நிறைவு; மீன்சந்தைகளுக்கு மக்கள்

யாழ்ப்பாணம்,நவ.1

இந்துக்களின் விரதகாலங்கள் நீண்டநாள்களுக்குப் பின்னர் நிறைவடைந்தநிலையில் மீன் சந்தைகளுக்கு கடந்த புதன்கிழமை அதிகளவான மக்கள் சென்று கொள்வனவில் ஈடுபட்டனர்.

பருத்தித்துறைக் கடற்கரையோரமாக உள்ள மீன்பிடித்துறைகளுக்கு காலை முதல் மீன்களை வாங்குவதற்கு மக்கள் ஆர்வம்செலுத்தியிருந்தனர்.

எனினும் சீரற்ற காலநிலை காரணமாக மீன்கள் குறைந்தளவிலேயே சந்தைகளுக்கு எடுத்துவரப்பட்ட நிலையில் சிலர் ஏமாற்றத்துடனும் திரும்பினர். (க-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையட்கள் தேவை

முல்லைத்தீவில் பண்ணையில் தங்கி யிருந்து குடும்பமாக வேலை செய்யக் கூடிய வேலையாட்கள் தேவை.
சம்பளம் ரூபா - **Rs.60,000/=**
தங்குமிடம் வழங்கப்படும்.
வேலை 9 மணித்தியாலயம் மட்டுமே.

**தொடர்பு:**
**077 556 5876/ +49 1521 6762267**

(C4295)A

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 75 ரூபா
நிலம் இழுத்துப் பதிக்க - 100 ரூபா

**077 334 1281**

## அரச பொது வைத்தியசாலை நலன்புரிச்சங்கம்

**பதவி வெற்றிடங்கள்**

**நோயாளர் நட்புறவாளர் (BEFRIENDER) பதவி**

யாழ் போதனா வைத்தியசாலையினை நாடும் நோயாளிகளின் அடிப்படைத் தேவைகளை இலகுபடுத்தி நோயாளரின் சுகாதார நலன் பெறுதலை வினைத்திறனாக்கும் நட்புறவாளர் (Befriender) சேவைத்திட்டத்தில் இணைந்து கொள்ள ஓர் வாய்ப்பு.

### வேலை தொடர்பான விபரங்கள்

- பணி வகை : பகுதி நேரம்
- பணி நேரம் : ஒரு பணி நேரம் 6 மணிநேரம்
  காலை : காலை 06.00 - மதியம் 12.00
  மதியம் : மதியம் 12.00 - மாலை 06.00
- சம்பளம் : ஒரு பணி நேரத்திற்கு ரூ.1.250
- சலுகைகள் : EPF மற்றும் ETF நிதிப் பங்களிப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன.

### விண்ணப்பதாரர்கள்

மருத்துவம், உளவள ஆலோசனை சார்ந்த துறையில் கற்கையினை (NVQ 3 Level) பூர்த்தி செய்தவர்கள் அல்லது அதே துறையில் குறைந்தது 3 வருட அனுபவத்துடன் சமூக சேவைப் பின்னணி உள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் நேர்முகத்தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**பயிற்சி :** பணி சார்ந்த பயிற்சிகள் வழங்கப்படும்.

விண்ணப்பிக்கும் முறை: உங்கள் சுயவிபரக்கோவையினை கீழுள்ள முகவரிக்கு முடிவுத் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.
முடிவுத்திகதி : 15.11.2025

021 222 3348
thwelfaresocity@gmail.com

நலன்புரிச்சங்க அலுவலகம்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 05 . 08 . 1943

விண்ணில் 12 . 11 . 2024



**அமரர்.திரு பரராஜசிங்கம் புஸ்பராஜா**
**(உத்தரவு பெற்ற அரச நில அளவையாளர்)**
**(திதி : வளர்பிறை ஏகாதசி)**

தந்தையும் தாயுமாய் என்னை காத்த தெய்வமே
ஓராண்டு மறைந்தாலும் பல நூறாண்டு போனாலும்
ஆறாது உங்கள் பிரிவின் துயரமும்
தீராது எங்கள் வலியின் ஆழமும்
உங்கள் இழப்பை எண்ணியெண்ணி
இன்றும் எங்கள் விழிகளில்
வழிகின்றதே கண்ணீரத்துளிகள்
கலங்கரையற்ற படகாய் நாம் தவிக்கின்றோம்
உங்கள் நினைவுகளை சுமந்து பயணிக்கின்றோம்
உழைப்பை உயர்வாய் எண்ணி மதித்தீரே
இறுதிவரை பணியாற்றி கம்பீரமாய் வாழ்ந்தீரே
உங்களை நாடியவர்களையும் உயர்த்தி ஆதரித்தீரே
உங்களை இவ்வுலகில் நாம் காண்பதேது அப்பா.
உங்கள் வார்த்தைகளும் சிந்தனைகளும் எமக்கு
வழிகாட்டும் என்ற நம்பிக்கையுடன் வழிந்தோடும் கண்ணீரை
உங்கள் காலடியில் சமர்ப்பிக்கின்றோம் அப்பா

**உங்கள் ஆத்மா சாந்தி அடைய**
**இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

உங்கள் நினைவில் வாழும்
மகன், மருமகள், பேரன்

(CS 306391) E

## வேலை வாய்ப்பு

யாழில் இயங்கும் பலசரக்கு கடை மற்றும் சுப்பர் மார்க்கட்டுக்கு கீழ் காணும் பணியாளர்கள் தேவை.

1. **Manager** (05 வருட அனுபவம்)
2. **Administration**
3. **Store Keeper**
4. **Sales Assistant**
5. **Packing** - பொதியிடல்

வயது எல்லை : 18-35
யாழ். மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

விபரங்களுக்கு:
**077 41 95 209, 077 41 95 218**

(CS 4293) A

## நல்லூர்க் கந்தன் திருமண சேவை

மகளுக்கோ, மகனுக்கோ, மருமகளோ, மருமகனோ என்ன வேண்டுமென்றாலும் உங்கள் விருப்பம் போல் விரைவாக ஒழுங்கு செய்து தரப்படும். மேலும் தோட்டம், சுயதொழில் புரியும் மணமகன்களுக்கு சீதனம் குறைவாக வீடு இல்லாமல் இருக்கும் மகள்களுக்கும் மண மகன்கள் உண்டு.

**தொடர்பு: வீ.ஜெயந்தி**
**077 9733 183**

(CS 4296) A

## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்

**விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்**

எமது சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் 02.11.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது. ஆகவே சகல அங்கத்தவர்களும் உரிய நேரத்திற்கு சமூகமளித்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**இணைச் செயலாளர்**

(CS 59780) E

# 'காற்புள்ளி' நூல் அறிமுக விழா

ர.அம்புஜன் எழுதிய 'காற்புள்ளி' நூல் அறிமுக விழா கவிஞர் கு.வீரா தலைமையில் திருமறைக் கலாமன்ற கலைத்தூதுக் கலையகத்தில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.
முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறை மேனாள் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக நாடக, அரங்கியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நவதர்ஷனி கருணாகரன், மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரியின் பிரதி அதிபர் லோ.சுரேன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ச-25)

## நெடுங்கேணி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம்.
## பதவி வெற்றிடம்

நெடுங்கேணி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தில் கீழ் குறிப்பிடப்படும் பதவி வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளதால் தகைமையுள்ள விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.
சகல விபரங்களும் உள்ளடக்கப்பட்டதாக சுயமாகத் தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தினை தலைவர், பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம், நெடுங்கேணி என்னும் முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாக 15.11.2025ம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். வயதெல்லை 18-45 வரை கூட்டுறவு சேவையிலுள்ளோருக்கு வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது என்பதுடன் கூட்டுறவு நிறுவனத்தில் கடமையாற்றுவோர் விண்ணப்பிக்கும் போது நிறுவனத்ினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

1) பதவி :- எழுதுனர் - 302/15 பதவி வெற்றிடம் :- 01
சம்பள அளவுத்திட்டம் 32435.00-460x10-520x10-51760.00 ம் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்திற்கு அமைய இதர படிகளும் வழங்கப்படும்.

**கல்வித் தகமை:-**

அ) கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டத்தில் எழுதுனர்/காசாளர்/கணனி பக்க உருவாக்குனர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது இரண்டு (02) ஆண்டு கால அனுபவம்/

கூட்டுறவுப் ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டத்தில் விற்பனை உதவியாளர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது நான்கு (04) ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவுப் ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/

க.பொ.த சாதாரணப் தரப்பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ்மொழி, கணிதம் என்பனவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி.

**தலைவர்,**
**பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம்,** **01.11.2025**

(CR 46200) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபாநாயகர் சண்டித்தனம்; சாடுகிறார் அத்துகோரள

கொழும்பு,நவ.1
சபாநாயகரின் செயற்பாடுகள் சண்டித்தனமானவை. பொலநறுவையில் உள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவரை அழைத்துவந்து நாடாளுமன்றச் சமையலறையைத் துப்பரவு செய்விக்கிறார். சபாநாயகரின் செயற்பாடுகள் நாடாளுமன்ற உத்தியோகத்தர்கள் மற்றும் அதிகாரிகளை அவமதிப்பதாகவுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் தலதா அத்துகோரள தெரிவித்துள் ளார்.

கொழும்பில் நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் கூட்டு ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
மாறுபட்ட அரசியல் கொள்கை மற்றும் நிலைப்பாட்டைக் கொண்டுள்ள நாங்கள் அனைவரும் ஜனநாயகத்தைப் பாதுகாக்கவேண்டும் என்ற பொது இலக்குடன் ஒன்றிணைந்துள்ளோம். இந்த ஒன்றிணைவு அரசியல் நோக்கங்களுக்கு அப்பாற்பட்டது. போலியான வாக்குறுதிகளால் மக்கள் ஏமாற்றமடைந்துள்ளார்கள். மக்கள் விடுதலை முன்னணியின் வரலாற்றைத் தெரிந்துகொள்ளாத இளம் தலைமுறையினர் மக்கள் விடுதலை முன்னணியின் வெறுப்புப் பேச்சில் உத்வேகமடைந்து ஆதரவளித்தார்கள்.

வெகுவிரைவில் அவர்கள் உண்மையை விளங்கிக் கொள்வார் கள். சபாநாயகரின் செயற்பாடுகள் சண்டித்தனமானவை. பதவிக்காலம் முடிவடைந்தவுடன் வீடு செல்லவேண்டும் என்பதை சபாநாயகர் நினைவில் வைத்துக்கொண்டு செயற்படவேண்டும்-என்றார். (எ-இ)

## பணியாளர்கள் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் நிறுவனத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை

- விற்பனையாளர் (ஆண்/பெண்)
- சுத்திகரிப்பாளர் (Service)
- இயந்திர வல்லுனர் (Mechanic)

தொடர்பு: 077 363 6005
077 363 6129 (WhatsApp)
(CR 46197) E

## நன்றி நவிலல்



"நன்றி மறப்பது நன்றன்று, நன்றல்லது அன்றே மறப்பது நன்று"
என்ற வள்ளுவப் பெருமானின் வாக்கிற்கு இணங்க
எமது பாசமிகு தாயார்

**கலாமணிதேவி நாகராஜா**

அவர்கள் 28.10.2025 இறைநிலை எய்திய செய்தி அறிந்தவுடன் இரங்கல் செய்தி, மேலும் அனைத்து வகைகளிலும் உடலுதவி, பொருளுதவி, பேருதவி புரிந்த, நல்லுள்ளம் அமைந்த, இனிய பெருமக்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றி நன்றி நன்றி வாழ்க வளமுடன்.

**குடும்பத்தினர்**
**72, காரைக்காட்டு லேன்,**
**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**
(CS 30601)A

# மக்கள் சனத்தொகை; வடக்கு பின்னடைவு!

கொழும்பு, நவ.1
இலங்கையில் நடத்தப்பட்ட சனத்தொகைக் கணக்கெடுப்பில் மேல் மாகாணம் 28.1 வீதம் அதிகமக்கள் தொகையைக் கொண்டுள்ளது. மிகக்குறைந்த மக்கள் தொகையாக 5.3 வீதம் வடக்கு மாகாணத்தில் வாழ்கின்றனர் எனத் தெரியவந்துள்ளது.

கம்பஹா மாவட்டத்திலேயே அதிக மக்கள்தொகை காணப்படுகிறது. அதன் மக்கள் தொகை 24,33,685 ஆகப் பதிவாகியுள்ளது. அடுத்தபடியாக அதிக மக்கள் தொகை கொண்ட கொழும்பு மாவட்டத்தின் மக்கள் தொகை 23,74,461 ஆக உள்ளது. 2 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகையினர் இந்த இரண்டு மாவட்டங்களில் மட்டுமே வசிக்கின்றனர். முந்தைய கணக்கெடுப்புகளைப் போலவே, இந்த முறையும் நாட்டின் மிகக் குறைந்த மக்கள் தொகை கொண்ட மாவட்டங்களாக வடக்கு மாகாணத்தில் உள்ள முல்லைத்தீவு (1,22,542), மன்னார் (1,23,674), கிளிநொச்சி (1,36,434), மற்றும் வவுனியா (1,72,257) ஆகிய மாவட்டங்கள் பதிவாகியுள்ளன. (ச-இ)

## பெயர் மாற்றம்

தேராவில் விசுவமடுவில் வசிக்கும் புஸ்பவதனி ஆகிய நான் எனது பெயரை புஸ்பலதா என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் புஸ்பலதா என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

புஸ்பலதா
(CS/30417) J-1

# மரண அறிவித்தல்



## வல்லிபுரம் நவலோகநாதன்

**(ஓய்வு பெற்ற பதில் அதிபர் - ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்)**

கப்பூதுவை பிறப்பிடமாகவும் சிவன் வீதி ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் நவலோகநாதன் அவர்கள் கடந்த (30.10.2025) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தசாமி - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகனும், ஜெகதாம்பாளின் அன்புக் கணவரும் (ஓய்வு பெற்ற ஆசிரியை – ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்), யதுர்ஷன் - லண்டன், சுவேதா- லண்டன், வினுஷன் (கொமர்ஷல் வங்கி, யாழ்ப்பாணம்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், வினோத் - லண்டன், சௌமிய பிரியா - கண்டி, ஆகியோரின் அன்பு மாமனாரும், கேஷிகாவின் அன்பு அம்மப்பாவும், நற்குணராசா (லண்டன்), பாக்கியநாதன் (லண்டன்), சிவநாதன் (துர்க்கா கிரேசர்), காலஞ்சென்ற மன்மதநாதன், இந்துமதி (லண்டன்), அருள்மதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஈஸ்வரதேவன் (ஓய்வு பெற்ற உதவி கல்விப் பணிப்பாளர்), லோகாம்பாள் (ஓய்வு பெற்ற பிரதி அதிபர்), முருகதாசன் (லண்டன்), கமலேந்திரன் (தபாலதிபர்), தயாநிதி (ஆசிரியை), உஷாதேவி (லண்டன்), விமலாதேவி (லண்டன்), துரைராஜா (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (02.11.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (சிவன் வீதி, ஆவரங்கால்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆவரங்கால் கருதடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தோற்றம்** 08.09.1964 — **மறைவு** 30.10.2025

சிவன் வீதி,
ஆவரங்கால் மேற்கு.

தகவல்: குடும்பத்தினர்
வினுஷன் - மகன் (0775263630)
ஜெகதாம்பாள் - மனைவி (0778451962)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# முப்பொன் விழா

யாழ்ப்பாணம், நவ.1

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம், யாழ்.மறை மாவட்டம், யாழ்.அமலமரித்தியாகிகள் சபை ஆகியவற்றின் ஏற்பாட்டில் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் முப்பொன் விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை, மாலை அமர்வுகளாக நடைபெற்றது.

காலை அமர்வில் 13 ஆய்வாளர்களின் ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கிய முப்பொன் விழா ஆய்வரங்க மலர் யாழ்.பல்கலைக்கழக மொழியியல் துறை ஓய்வுநிலைப் பேராசிரியர் கலாநிதி.சுபதினி ரமேஷால் வெளியிட்டு வைக்கப்பட்டது. தொடர்ந்து ஆய்வாளர்களின் ஆய்வுரைகள் இடம்பெற்றன.

மாலை அமர்வு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்றக் கலைத்தூதுக் கலையகத்தில் முப்பொன் விழாக்குழு இணைத் தலைவர் அருட்தந்தை ஜெரோ செல்வநாயகம் தலைமையில் கலையரங்காக இடம் பெற்றது. இதன்போது கலைநிகழ்வுகளாக அபிநயப்பாடல், நடனம், யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மாணவி சபேசன் நம்சியாவின் உரை, திருமறைக்கலாமன்ற மாணவி சுதர்சினி கரன்சனின் நெறியாள்கையில் சுவாமி ஞானப்பிரகாசரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் நாட்டிய நாடகம் என்பன அரங்கேற்றப்பட்டன. முப்பொன் விழாவையொட்டி நடத்தப்பட்டபோட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பும் இடம்பெற்றது. (ச-41-66)



வரணி நிதி அக்கடமி மற்றும் சாவகச்சேரி லைசியம் உயர் கல்லூரியின் சாதனையாளர் கௌரவிப்பும், பிரிவுபசார நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன. நிர்வாக இயக்குநர் எஸ்.பி.ஞானநிரோசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், கைதடி ஆயுள்வேத வைத்தியர் ஏ.வி.எம்.மிராஜ், கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.ஏ.டி எஸ்.பி.டிசாநாயக்க உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (க-159)

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய கந்தசஷ்டி உற்சவ சூரசங்ஹாரம் கடந்த திங்கட்கிழமை அடியவர்கள் சூழ பக்திபூர்வமாக நடைபெற்றது. (ச)






## மரண அறிவித்தல்

மலர்வு 21 . 04 . 1981



உதிர்வு 30 . 10 . 2025

### சின்னத்தம்பி திருச்செல்வம்

**(சிவில் பொறியியலாளர்)**

ஆராய்ச்சியார் வளவு, சுதுமலை தெற்கு, மானிப்பாயை பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி திருச்செல்வம் அவர்கள் கடந்த 30.10.2025 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு சின்னத்தம்பி - திருமதி கமலாதேவி சின்னத்தம்பி தம்பதியரின் பாசமிகு ஏக புத்திரனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், திருநாவுக்கரசு, திருமதி அமிர்தகௌரி திருநாவுக்கரசு தம்பதியரின் பாசமிகு மருமகனும், வைத்தியர் பிரியகலாவின் (யாழ்.போதனா வைத்தியசாலை) அன்புக் கணவரும், வாசுதா, அக்ஷயா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சசிகலா (யாழ். பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்), நாகேஸ்வரி (யாழ். சுன்னாகம் மயிலினி மகா வித்தியாலயம்), ஆகியோரின் சகோதரனும், சரவணபவன், மதன், சசிகலா, வட்சலா, ரமேஸ்சங்கர் ஆகியோரின் மைத்துனரும், சக்திபாலன், புருசோத் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (02.11.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு ஆராய்ச்சியார் வளவு, சுதுமலை தெற்கில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் : குடும்பத்தினர்.**
**077 579 9977 (மனைவி)**
**076 166 3788 (சகோதரி)**



## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 07 . 1937



மறைவு 31 . 10 . 2025

### திருமதி சறோஜினிதேவி பாக்கியநாதன்

அராலி கிழக்கு, சுதேசிய வைத்தியகலாநிதி துரைரத்தினம், ரோசரத்தினம் தம்பதியினரின் மூத்த புதல்வி திருமதி. சரோஜினிதேவி பாக்கியநாதன் அவர்கள் கடந்த 31.10.2025 அன்று காலமானார்.

அன்னார் அமரர் பாக்கியநாதன் அவர்களது அன்பு மனைவியும், அகிலன் (நுண்கலைத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), அமரர் அருந்தினி ஆகியோரது பாசமிகு தாயாரும், நிஷங்காதேவி, மோகனதாஸ் ஆகியோரது சகோதரியும், திருமதி. மனோறஞ்சிதம் மோகனதாஸ், அமரர்களான விநாயகமூர்த்தி, மகேஸ்வரி, சுந்தரமூர்த்தி, அன்னம் ஆகியோரின் மைத்துனியும், திருமதி. பவானி அகிலன் (விளையாட்டு விஞ்ஞான அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), துவாரகன், லக்ஷிக்கா, துஷாறகன் ஆகியோரின் மாமியும், ஆதிரை, ஆயிழை ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.11.2025) நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று அராலி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல 71/2,**
**கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**

**தகவல் :**
**பா.அகிலன் (மகன்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாடியிலிருந்து வீழ்ந்து குடும்பத்தலைவர் பலி

யாழ்ப்பாணம், நவ. 1
யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில், மாடியில் இருந்து தவறி வீழ்ந்த குடும்பத்தலைவர் ஒருவர் சிகிச்சையின் போது உயிரிழந்துள்ளார்.
அச்செழு நீர்வேலியைச் சேர்ந்த சுப்பையா உதயராசா (வயது 56) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
கட்டுமானப் பணியாளரான அவர் கடந்த 22ஆம் திகதி பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது தவறி வீழ்ந்துள்ளார். இதையடுத்து, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், மேலதிக சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்தார்.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## குருதிக்குத்...

யாழ்ப்பாணம் போதனாவின் அண்மைக்காலமாக 'ஓ பொசிடிவ்' குருதிக்குத் தட்டுப்பாடு நிலவிய நிலையில், தற்போது அனைத்து வகைக் குருதிக் கும் தட்டுப்பாட்டையும் பற்றாக்குறையையும் எதிர்கொண்டுள்ளோம்.
குருதி வங்கியில் 330 பைந்த் குருதி இருக்க வேண்டிய இடத்தில் தற்போது 226 பைந்த் குருதியே இருப்பில் இருக்கின்றது. தினமும் 35 - 40 பைந்த் குருதி எமது இரத்த வங்கியால் நோயாளர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றது.
தற்போது விபத்துக்கள், சத்திர சிகிச்சைகள் அதிகரித்துச் செல்வதால் குருதியின் தேவை தினமும் அதிகரித்துச் செல்கின்றது. குருதிக்கொடை முகாம்கள் மூலம் குருதி சேகரிக்கப்பட்டாலும் அதுவும் பற்றாக்குறையாகவே இருக்கின்றது.
எனவே, குருதிக்கொடையாளர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்த வங்கியின் பின்பக்க நுழைவாயிலின் ஊடாகத் தினமும் காலை 8 மணியிலிருந்து மாலை 4 மணி வரை வருகை தந்து குருதிக் கொடை செய்து உயிர்காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்கு மாறு கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (அ-ம-100-66)

## டெங்குக்கு...

ஒரு இலட்சத்து 6 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகரசபைகளின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் பொதுச்சுகாதார பரிசோதகர் ப.தினேஸ் தலைமையிலான குழுவினரால் அண்மையில் டெங்குக் கட்டுப்பாடு தொடர்பான களப் பயணம் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது 14 ஆதனங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்ட போது, குற்றஞ்சாட்டப்பட்ட அனைத்து ஆதன உரிமையாளர்களும் குற்றத்தை ஏற்றுக்கொண்டனர்.
இதையடுத்தே, அவர்களுக்கு எதிராக ஒரு இலட்சத்து 6 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (அ-ம-100)

## நாணய...

பட்ஜெட் எதிர்வரும் 7ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. இந்த பட்ஜெட் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் வெவ்வேறு கருத்துகளை முன்வைத்து வருகின்றனர்.
இவ்வாறான நிலையிலேயே, பட்ஜெட்டில் நாணய நிதியத்தின் ஆதிக்கம் இருக்கும் என பிரதான எதிர்க்கட்சி கூறியுள்ளது.
நாணய நிதியத்தின் பரிந்துரைகளை உள்வாங்கியே எதிர்வரும் பட்ஜெட்டை அரசாங்கம் சமர்ப்பிக்கும். ஏனெனில், ஆளுங்கட்சியின் அண்மைக்கால செயற்பாடுகள் அனைத்தும், சர்வதேச நாணய நிதியத்தைத் திருப்திப்படுத்தும் வகையிலேயே அமைந்துள்ளன என்றும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியுள்ளது.
மாகாணசபைத் தேர்தலை இலக்கு வைத்து வரிகளைக் குறைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருந்தது. ஆனால், அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் கூட்டுறவுத் தேர்தல்களில் அரசாங்கத்துக்கு தொடர்ச்சியாகத் தோல்வி ஏற்படுவதால், மாகாணசபைத் தேர்தல்களை எதிர்கொள்வதற்கு அரசாங்கம் அஞ்சுகின்றது என்று பிரதான எதிர்க்கட்சி மேலும் தெரிவித்துள்ளது. (அ-ம-44)

## பெற்றோலின்...

திருத்தத்தை நேற்று இரவு அறிவித்தது. இதன்படி, 92 ஒக்ரேன் பெற்றோலின் விலை 5 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 294 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
சூப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு அதன் புதிய விலையாக 318 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை 95 ஒக்ரேன் ரக பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 355 ரூபாவாகவும், மண்ணெண்ணெய் ஒரு லீற்றரின் விலை 180 ரூபாவாகவும் மாற்றமின்றி பேணப்படுகின்றது. (அ-ம)

## பாதிரியார்...

மாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-
மன்னார் மாவட்டத்தின் வங்காலை, முத்தரிப்பு போன்ற இடங்களில் நபரொருவர் பாதிரியார்களின் உடையில் நிதி சேகரிப்பில் ஈடுபட்டு வந்துள்ளார். பொது மக்களிடமும் தன்னை வெவ்வேறு பங்குகளைச் (கத்தோலிக்க மறை மாவட்ட நிர்வாக அலகு) சார்ந்தவர் என்று முன்பின் முரணாக வெளிப்படுத்தியுள்ளார். சந்தேகமடைந்த மக்கள் இது தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கியுள்ளனர்.
இதையடுத்து, குறித்த நபர் நானாட்டானில் இருந்து மன்னாருக்கு பயணித்த போது மன்னார் பெருநுத் தரிப்பிடத்தில் வைத்து பொலிஸார் அவரைக் கைதுசெய்துள்ளனர். சந்தேகநபர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில், அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம-25-213-56-60)

## கிளிநொச்சியைச்...

சில்வர்ஸ்டார் டிலக்சன் என்ற நபரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். அவருடன் பிறிதொரு இலங்கையரும் பயணித்த நிலையில், அவரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்று தெரிய வருகின்றது.
ரஷ்யாவின் நெருங்கிய நட்பு நாடாக பெலாரஸ் அறியப்படுகின்றது. உக்ரைன் - ரஷ்ய மோதல்களின் பின்னர், ஊடுருவலாளர்களால் பெலாரஸின் தேசியப் பாதுகாப்பு பெரும் அச்சுறுத்தலுக்குள் தள்ளப்பட்டுள்ளது. இதனால், காட்டுப் பகுதி வழியாக சந்தேகத்துக்கு இடமாக ஊடுருவும் நபர்கள் மீது பெலாரஸ் படைகள் துப்பாக்கிச் சூடு நடத்தி வருகின்றன.
அத்தகையதொரு தாக்குதலின்போதே, அவர்கள் இருவரும் கொல்லப்பட்டிருக்கலாம் என்று முதற்கட்டத் தகவல்கள் வெளிவந்துள்ளன. இது தொடர்பான மேலதிக தகவல்களுக்காக, இலங்கையின் வெளிவிவகார அமைச்சு பணியாற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-113-26)

## 25 கிராம்...

25 கிராம் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில், சந்தேகநபர் ஒருவர் சாவகச்சேரியில் கைது செய்யப்பட்டுள்ளார்.
பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொண்ட நடவடிக்கையின்போதே அவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சந்தேகநபரை நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தும் நகர்வுகளையும் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-26)

## யாழ்ப்பாணத்தில்...

ஹெரோய்ன் போதைப்பொருளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண்ணொருவர் உட்பட ஐந்து பேர் யாழ்ப்பாணத்தில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.
2 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோய்னுடன் ஒரு ஆணும், 2 கிராம் 150 மில்லிகிராம் ஹெரோய்னுடன் ஒரு பெண்ணும், 80 மில்லி கிராம் ஹெரோய்னுடன் மூன்று ஆண்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். அவர்களை நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தும் நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## விசா...

பில் இடம்பெறும் என்று இலங்கைக்கான இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.
இந்திய விசாக்களைப் பெறுவதற்காகவும், தூதரக உதவிகளுக்காகவும், இதர தேவைகளுக்காகவும் இலங்கையர்கள் தூதரகங்களுக்குச் செல்ல வேண்டிய நடைமுறை தற்போது இல்லை. இந்தியாவின் விசேட அனுமதியுடன், பிரத்தியேக முகவர்கள் அதற்காகச் செயற்பட்டு வந்தனர். இவ்வாறான நிலையிலேயே, அந்த நடைமுறைகள் அனைத்தும் நேற்றுடன் கைவிடப்பட்டுள்ளன.
இதன்படி, நவம்பர் மாதம் மூன்றாம் திகதிமுதல் கொழும்பில் உள்ள பிரதான தூதரகத்திலும், கண்டி மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள துணைத் தூதரகங்களிலும் மட்டுமே சேவைகளைப் பெறமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், ஒரு நாளைக்கு 50 பேரை மட்டுமே அனுமதிக்கும் வகையில் நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன.
இந்த நடைமுறையில் மேலதிக மாற்றங்கள் செய்யப்பட்டால், அது தொடர்பில் தெரிவிக்கப்படும் என்று இலங்கைக்கான இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது. (அ-ம)

## வாழ்க்கைச்...

தலைநகரில் தனிநபரின் வாழ்க்கைச் செலவு மாதமொன்றுக்கு 506 டொலராகக் கணிக்கப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் மாலைதீவு முதலாவது இடத்தில் உள்ளது. மாலைதீவில் தனிநபர் ஒருவரின் வாழ்க்கைச் செலவு மாதமொன்றுக்கு 840 டொலராகப் பதிவாகியுள்ளது. (அ-ம)

## நூலகக்...

ரி-56 ரக துப்பாக்கி, 59 தோட்டாக்கள், 2 மகசீன்கள், 3 சிறிய குண்டுகள், குருதிக் கறைபடிந்த துணிகள், பஞ்சு, பன்டேஜ்கள், சேலைன் மற்றும் மாவீரர் தினத்தைக் கடைப்பிடிப்பதற்காகக் கட்டப்பட்ட திரைச்சீலையின் ஒருபகுதி எனக் கருதப்படும் துணி, கிளைமோரை வெடிக்கப் பயன்படுத்தப்படும் ரிக்னேட்டர், வயர்கள் என்பனவே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூலக மேற்கூரையைத் திருத்தும் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. இதன்போது, ஆயுதங்கள் இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்ட நிலையில், சம்பவ இடத்துக்கு வந்த அவர்கள் பொலிஸ் விசேட அதிரடிப் படையின் வெடிகுண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவின் உதவியுடன் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதன்போதே, பெருமளவு ஆயுதங்களும், காயங்களுக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.
பத்திரிகையொன்றின் 2005ஆம் ஆண்டு வெளியான பிரதிக்குள் சுற்றப்பட்டிருந்த நிலையிலேயே இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட ஆயுதங்கள் தொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிவித்து மன்றின் அறிவுறுத்தலுக்கு அமைய அடுத்தகட்ட நடவடிக்கையை முன்னெடுக்க உள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.
அத்துடன் நீதிமன்ற அனுமதிபெற்று மேலதிக தேடுதல்களை நடத்தவும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. வெடிபொருள்கள் மற்றும் ஆயுதங்கள் மீட்கப்பட்ட பகுதி தொடர்ச்சியாக பொலிஸாரின் விசேட கண்காணிப்பின் கீழ் உள்ளது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நன்னீர்மீன் உற்பத்தி கண்காட்சியும் விற்பனையும்

யாழ்ப்பாணம், நவ.1

நன்னீர்மீன் உற்பத்தி மற்றும் பெறுமதி சேர் உணவு வகைகளின் கண்காட்சியும் விற்பனையும் யாழ். முற்றவெளியில் இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் பி.ப 2 மணி தொடக்கம் பி.ப 9 மணிவரை நடைபெறவுள்ளது என்று நீர்வழங்கல் அமைச்சின் வடமாகாண உதவிச் செயலாளர் திருமதி ராதிகா சன்சீவன் அறிவித்துள்ளார். (ச-25)

# இலங்கையின் சனத்தொகையில் ஆண்கள் 48.3% பெண்கள் 51.7%

கொழும்பு, நவ.1

**இலங்கையின் மொத்த சனத்தொகை 21.7 மில்லியனாக பதிவாகியுள்ளது. இதில் ஆண்களின் எண்ணிக்கை 48.3 வீதமாகவும்,பெண்களின் எண்ணிக்கை 51.7 வீதமாகவும் பதிவாகியுள்ளது என்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

2024 ஆம் ஆண்டுகுடிசன,வீட்டு வசதிகள் தொகைமதிப்பின்போது இலங்கையின் சனத்தொகை 21,781,800 ஆக பதிவாகியுள்ளது. இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை சிறியளவில் அதிகரித்துள்ளதோடு, தமிழ் பேசும் முஸ்லிம் மக்களின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. 2012ஆம் ஆண்டு 2,269,266 ஆகக் காணப்பட்ட இலங்கைத் தமிழர்கள் 2024 ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் 2,681, 627ஆக காணப்படுகின்றனர். மேலும் 2012 ஆம் ஆண்டு1,892, 638 ஆக காணப்பட்ட இலங்கை முஸ்லிம்கள் 2024 ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் 2,283,246 ஆகக் காணப்படுகின்றனர். இதே வேளை, நாடுபூராகவும் உள்ள மலையகத் தமிழர்களின் எண்ணிக்கை குறைவடைந் துள்ளது. 2012 ஆம் ஆண்டு 839, 504 ஆக காணப்பட்ட மலையகத் தமிழர்கள் 2024ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் 600,360 ஆக காணப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)


## சைவ வித்தியா விருத்திச் சங்கம்

### திருமந்திரப் போட்டி

சைவ வித்தியா விருத்திச் சங்கம் நடாத்தும் அறநெறிப் பாடசாலைகளுக்கான திருமந்திரப் போட்டி எதிர்வரும் 02.11.2025 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கலாசாலை வீதி திருநெல்வேலியில் அமைந்துள்ள யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் நடைபெறும். அனைத்து அறநெறிப் பாடசாலையிலிருந்தும் விண்ணப்பித்த போட்டியாளர்கள் தவறாது சமூகமளிக்குமாறும் மற்றும் ஒரு பிரிவில் 3 போட்டியாளர்கள் மட்டும் பங்கு பற்றலாம் என்பதனை அறியத்தருகின்றோம்.

நன்றி

தலைவர்
சைவ வித்தியா விருத்திச் சங்கம்
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.
021 222 6525

(CS 46202) E


# சர்வதேசத்தில் சாதித்த மிதுன்ராஜுக்கு மதிப்பளிப்பு



யாழ்ப்பாணம், நவ.1

தெற்காசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டியில் இலங்கை சார்பில் பங்கேற்று பதக்கம் வென்ற வடமராட்சியைச் சேர்ந்த மிதுன்ராஜைப் பாராட்டி மதிப்பளிக்கும் நிகழ்வு பருத்தித்துறையில் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள நிகழ்வில் பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் நடராசா திருலிங்கநாதன் பிரதம விருந்தினராகவும் பருத்தித்துறை நகர சபை தவிசாளர் வின்செண்ட் டீ போல் டக்ளஸ் போல் மற்றும் யோகாசன ஆசான் ம.இரத்தினசோதி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஹாட்லிக் கல்லூரி மாணவனும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டு கழக வீரருமான சுசீந்திரகுமார் மிதுன்ராஜ், இந்தியா ஜார்கண்ட் மாநிலத்தின் தலைநகர் ராஞ்சியில் உள்ள பிர்சா முண்டா காற்பந்தாட்ட விளையாட்ட ரங்கில் கடந்த 24.10.2025 அன்று இடம்பெற்ற 4ஆவது தெற்காசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டித்தொடரில் இலங்கை சார்பில் பங்கேற்று ஆண்களுக்கான குண்டு எறிதல் போட்டியில் 14.68 மீற்றர் தூரத்தைப் பதிவுசெய்து வெண்கலப் பதக்கத்தை வென்றெடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-25,100)


## மரண அறிவித்தல்

தோற்றம்
07 . 08 . 1954



மறைவு
30 . 10 . 2025

### திருமதி சத்தியமூர்த்தி தவயோகராணி (ராணி)

யாழ்ப்பாணம் இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சத்தியமூர்த்தி தவயோகராணி (ராணி) அவர்கள் கடந்த 30.10.2025 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சத்தியமூர்த்தி (ஓய்வுபெற்ற தபால் அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவகுரு (வை.சி) - ஞானப்பூங்கோதை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், மதுரா (கனடா), மீரா, மதனமோகன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், கிருபாகரன் (கனடா), சந்திரகுமார், அனோஜா ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி, பரிமளம் மற்றும் சந்திரவதனி, புஸ்பரதி, யோகேந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, அருமைநாயகம், சிவசுப்பிரமணியம், நடராசா, குலேந்திரா, கமலவேணி, சத்தியவேணி, விஜயவேணி, இரவிந்திரன், அருள்சோதி, கலாவதி மற்றும் சிவராசா, சுந்தரமூர்த்தி, சண்முகேந்திரன் ஆகியோரின் மைத்துனியும், ஷயான், கிருஷான், மதுசான் (கனடா), ஹம்ஸவர்ஷினி, ஹரிஸ்பவன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.11.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணிக்கு இடம்பெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: 077 77 80 284
077 96 72 573

தகவல்
குடும்பத்தினர்.

(CS 42941) A


# தவறான முடிவெடுத்து யுவதி உயிர்மாய்ப்பு!

யாழ்ப்பாணம் - துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய யுவதியொருவர், தூக்கிலிருந்து நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்தனர்.

தூக்கிலிருந்து மீட்கப்பட்ட யுவதியின் சடலம் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்ட நிலையில், பரிசோதனைகளை மேற்கொண்ட மருத்துவர்கள் அந்த யுவதி முன்னதாகவே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவித்துள்ளனர். கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை நெல்லியடிப் பொலிஸார் நெறிப்படுத்தினர். (ம-100)


## மணல் விற்பனைக்கு

கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற மணல் விற்பனைக்கு உண்டு.

- தென்மராட்சி - 50,000
- யாழ்மாவட்டம் - 55,000
- வடமராட்சி - 55,000

விநியோகிக்கப்படும். மற்றும் கனரக வாகனங்களுக்கு யாழ் மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம் போட்டு தரப்படும்.

தொடர்பு: 076 324 9977




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.11. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org